Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 67 | கர்த்தாவே, உம்முடைய கோபத்திலே என்னை கடிந்து கொள்ளாதேயும் சங்.6:1 | மார்ச் 2021 No.3

தூய ஆவியானவரின் பிரசன்னத்திற்கான அடையாளங்கள்

The marks of the presence of the Holy Spirit

J.C. Ryle (1816-1900)

"கிறிஸ்துவின் அன்பில்லாதவன் அவருடையவனல்ல" ரோமர் *8:9.*

ஆவியானவரை பெற்றுக் கொண்டவர்களில் அது வெளிப்படையாகக் காணப்படாவிட்டால் அது வேதவாக்கியத்திற்கு முரணானது. "நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால் சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம்" *1 யோவா.1:6.* "இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும் பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும்; நீதியைச் செய்யாமலும், தன் சகோதரரில் அன்பு கூராமலும் இருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல" *1 யோவா.3:10.*

தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டதென்றும், தாங்கள் இரட்சிக்கப்பட்டுவிட்டோம் என்றும் சொல்லுகிறவர்கள், பாவத்திலே வாழ்ந்து கொண்டு பகிரங்கமாக தேவ கட்டளைக்கு எதிராக நடப்பது மிகவும் துக்கமானது. உத்தம விசுவாசி பாவத்துக்கு மரிக்க வேண்டும். "அவர் மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான்" *1 யோவா.3:3.*

தூய ஆவியானவர் உங்களில் இருப்பது, உங்கள் கிரியைகள் மூலம் வெளிப்பட வேண்டும். ஆவியையுடையவர்களை அறிந்து கொள்வது எப்படி?

"ஆதலால் அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" மத்.*7:20* என்று இயேசு கூறியிருக்கிறார். ஆவியின் கனியில்லாதவர்களிடம் ஆவியானவரில்லை. ஆவியானவர் ஒருவரில் வாசம் பண்ணுவதை நாம் உணரவும், பார்க்கவும், அறியவும் கூடும்.

உயிருள்ள மரத்தில் இலைகள், பூக்கள், கனிகள் ஆகியவை வெளிப்படுவதுபோல, ஆவியால் நிரப்பப்பட்ட ஒருவரது வாழ்வில் அவரது எண்ணங்கள், விருப்பங்கள், சிந்தனைகள், பழக்கங்கள், வாழ்வு ஆகிய அனைத்துமே ஆவியின் கனியாக வெளிப்படும்.

பிரசங்கங்கள் கருவறை (ஜெப அறை)யில் பிறப்பதற்கு பதிலாக கல்லறையிலிருந்து பிறக்கின்றன. எனவே அவை மரத்துப் போனதும், வல்லமையற்றதுமாயிருக்கின்றன

ஐந்து முக்கிய அடையாளங்கள்

1. தூய ஆவியானவர் குறிப்பிட்ட ஒழுங்கின்படி செயல்படுகிறவர்.

தேனீக்கள் கட்டும் கூட்டின் அறைகள் ஒரே வடிவாய் அமைந்திருப்பது போல, ஆவியானவரின் கிரியையும் ஒரே மாதிரியான பலனைத் தரும். அவரது கிரியைகள் தேர்ச்சியடைந்த ஒருவரின் கிரியையாய் அமையும். உலக மனிதன் அந்த அழகைக் கண்டுகொள்ள முடியாது. அவனுக்கு அது மடமையாகத் தென்படலாம். "ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்" *1 கொரி. 2:15.* அவைகளெல்லாம் புத்தியுள்ளவனுக்குத் தெளிவும், ஞானத்தைப் பெற்றவர்களுக்கு யதார்த்தமுமாயிருக்கும்" நீதி.*8:9*

2. தூய ஆவியானவர் இருக்குமிடத்தில் ஆழமான பாவ உணர்வும், உத்தம மனந்திரும்புதலும் காணப்படும்:

ஆவியானவரின் விசேஷித்த பண்பு, பாவத்தைக் கண்டித்து உணர்த்துவது யோவா.*16:8.* தேவனுடைய எல்லையற்ற பரிசுத்தம் காண்பிக்கப்படுகிறது. நமது இயற்கையான கேடுபாடுகளையும் பலவீனங்களையும் அவர் கண்டிக்கிறார். நமது குருட்டாட்டமான சுயநீதியை அவர் எடுத்துப்போடுவார். நமது குற்றங்குறைவுகளையும், வரப்போகும் ஆபத்துகள் ஆகியவற்றைக் கண்டுகொள்ள நமது கண்களைத் திறக்கிறார். தேவன் விரும்பாத பாவங்களை நாம் வெறுக்கவும், அவற்றைக் குறித்து இருதயம் நொறுங்கவும் வழி நடத்துகிறார். இயேசுக் கிறிஸ்து ஒருவரே உலக இரட்சகர் என்ற உறுதியான விசுவாசம் ஏற்படச் செய்கிறார். கிறிஸ்துவினுடையவைகளை எடுத்து மனிதனுக்கு வெளிப்படுத்துவது அவரது முக்கிய பணி யோவா.*16:15.* பாவ உணர்வு பெற்ற ஆத்துமாவை இயேசுவிடம் வழிநடத்தி அவரது இரத்தத்தின் மூலம் பரிகாரத்தைப் பெற்றுக்கொள்ளச் செய்கிறது. நீதிமான்களுக்காகவும், பாவிகளுக்காகவும் கிறிஸ்து பாடுபட்டார் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. பாவநோயால் வாடும் ஆத்துமா கிறிஸ்துவை விசுவாசிக்கவும், அவரை ஏற்றுக்கொண்டு அவருக்கு முற்றிலும் தன்னை அர்ப்பணிப்பதின் மூலம் மன்னிப்பையும், சமாதானத்தையும், நித்திய ஜீவனையும் பெறலாம் என்பதை விளக்குகிறார். கிறிஸ்துவின் முடிவுற்ற செயலாகிய மீட்பு நமது அனைத்து ஆவிக்குரிய தேவைகளுக்கும் போதுமானது என்பதையும் காண்பிக்கிறார். நமது நற்பண்புகளைக் குறித்தல்ல இயேசுவின் நற்பண்புகளைக் குறித்தே மேன்மை பாராட்டச் செய்வார். கிறிஸ்து ஒருவரையே சார்ந்து கொள்ளவும் அவர் மேல் மட்டும் நம்பிக்கை வைக்கவும் செய்வார். "அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக் கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்" ரோமர் *6:25*

3. தூய ஆவியானவர் வாசம் பண்ணுமிடத்தில் பரிசுத்தமுண்டு :

அவர் தூய்மைப்படுத்தும் ஆவியானவர் ரோமர் *1:4.* கடினமானதும், மாம்சீகமானதும், லௌகீக சிந்தை நிறைந்ததுமான மனித இருதயத்தை எடுத்துவிட்டுப் பதிலாக உணர்வுள்ளதும், ஆவிக்குரியதும், வேதவசனத்தில் பிரியப்படுகிறதுமான இருதயத்தை அளிக்கிறார். தேவனுக்கு நேராக மனிதனுடைய முகத்தைத் திருப்புகிறார். ஆகவே அவன் அவரை மட்டும் பிரியப்படுத்த விரும்பி, இவ்வுலகக் கலாச்சாரங்களுக்குத் தன் முதுகைக் காட்டுகிறான். ஆவியின் கனி ஒன்பதும் முளைத்து கனிதரச் செய்கிறார் கலா.*5:22-23.*

4. தூய ஆவியானவரிருக்குமிடத்தில் உத்தம தனி ஜெபம் உண்டு :

அவர் கிருபையின் ஆவியும் விண்ணப்பத்தின் ஆவியுமானவர் சகரி.*12:10.* நாம் அப்பா பிதாவே என்று அழைக்கும் புத்திரசுவிகார அதிகாரத்தை அருளுகிறார். மனிதன் தேவனை நோக்கிக் கதறி ஜெபிக்க வேண்டும், அவரோடு உரையாட வேண்டும் என்று உணரச் செய்கிறார். ஒரு குழந்தை இயற்கையாகவே சுவாசிப்பது போல், மனிதன் அவரோடு எப்போதும் தொடர்பிலிருப்பதை எதிர்பார்க்கிறார்.

5. ஆவியானவரிருக்குமிடத்தில் அன்பும் தேவ வசனத்தின் மீதுள்ள பயபக்தியும் காணப்படும் :

பிறந்த குழந்தை தாய்ப்பாலை தேடுவது போல புதிதாய் பிறந்த ஆத்துமா தேவவசனமாகிய ஞானப் பாலின் மீது நாட்டம் கொள்ளச் செய்கிறார். அவர் கர்த்தருடைய நியமங்களில் மகிழ்ச்சியடையச் செய்கிறார்

(3-ம் பக்கம் பார்க்க)

மூக்கிய அறிவிப்பு

ஒவ்வொரு மாதமும் 10-ம் தியதிக்குள் பத்திரிகை வரத் தவறினால் உடனே எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்

மொபைல் : 95432 21008

வாட்ஸ்ஆப் : 94897 40295

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

ஒரு ஆண்டு காணிக்கை ரூபாய் 200

இம்மாத பொன்னான சிந்தனை

அழிக்க முடியாத மெய் கிறிஸ்தவம்

கிறிஸ்தவத்தை எதிர்த்தவர்களில் ரோம அரசர்களைக் காட்டிலும் அதிகக் கொடூரமாய் எதிர்த்தவர்கள் எவரும் இல்லை. அவர்களில் முதல்வனான நீரோ மன்னன் சமாதானமற்றவனாக கவலை மிகுதியினால் தற்கொலை செய்து மடிந்தான். டொமீஷியஸ் தன் வேலைக்காரர்களால் படுகொலை செய்யப்பட்டான். ஹேட்டிரியன் கொடிய நோயால் பீடிக்கப்பட்டு கொடூர வேதனையோடு மரித்தான். செவரஸ் தன் மக்களின் துரோகத்தாலேயே மரணமடைந்தான். மாக்கிமஸ் மூன்று ஆண்டுகள் அரசு புரிந்து அகால மரணமடைந்தான். டேஷியஸ் சேற்றிலே புதைந்து மாண்டான். அவன் உடல் எடுக்கப்படவில்லை. வில்லேரியஸ் பெரிசியரால் பிடிபட்டு உயிரோடு தோலுரிக்கப்பட்டு மாண்டான். டோக்ஸீஷியன் பைத்தியம் பிடித்து அலைந்தான். மேக்ளிமாஸ் நான்று கொண்டு செத்தான். இயேசு நாமம் உலகத்தில் இல்லாதபடி அழித்து விடுவதாக சபதம் செய்த ஜூலியன் போரில் காயமடைந்து விழுந்து, உயிர் பிரியும் வேளையில் தன் உடலிலிருந்து வடிந்த உதிரத்தை கையில் அள்ளி வானத்துக்கு நேராக எறிந்து நசரேயனே, நீயே ஜெயித்தாய் என்று கூறி மரித்தான்.

இவைகளையெல்லாம் பார்த்தறிந்து சிந்தித்த ரோம அரசனாகிய கான்ஸ்டன்டைன் பயந்து நடுங்கி கி.பி.313-ல் கிறிஸ்தவனாகி தன் நாட்டு மக்கள் அனைவரும் கிறிஸ்தவர்கள் ஆகும்படி கட்டளையிட்டான். மெய்க் கிறிஸ்தவத்தை எதிர்த்த எவருமே வாழ்ந்ததாக சரித்திரம் இல்லை.

வாக்குத்தத்தம்

யாக்கோபே, இஸ்ரவேலே : என் வழி கர்த்தருக்கு மறைவாயிற்று என்றும், என் நியாயம் என் தேவனிடத்தில் எட்டாமல் போகிறது என்றும் நீ சொல்வானேன்?

பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதி தேவன் சோர்ந்து போவதுமில்லை, இளைப்படைவதுமில்லை; இதை நீ அறியாயோ? இதை நீ கேட்டதில்லையோ? அவருடைய புத்தி ஆராய்ந்து முடியாதது.

சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவ மில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார்.

இளைஞர் இளைப்படைந்து சோர்ந்து போவார்கள், வாலிபரும் இடறிவிழுவார்கள்.

கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ புதுபெலன் அடைந்து, கழுகு களைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள். ஏசாயா 40:27-31

இஸ்ரவேலுக்குள் தேவன் பிரமாணிக்கமே.

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2021 மார்ச் மாத தூதனுக்காக என் தேவனை அதிக நன்றியோடும், வெகு மனத்தாழ்மையுடனும் துதிக்கிறேன். **வருகையின் தூதன்** ஊழியத்திற்காக கர்த்தருடைய பிள்ளைகள் அனுப்பிய அன்பின் காணிக்கைகளுக்காக கண்ணீரோடு கர்த்தரை துதிக்கிறேன். அன்பின் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எங்கள் மனப்பூர்வமான நன்றியை தெரிவிக்கிறேன்.

வருகையின் தூதன் வாசகர் அனுப்பும் காணிக்கைகளினால் மாத்திரமே வருகையின் தூதன் ஊழியங்கள் நடைபெறுகிறது என்பதை வாசகருக்கு தெரிவித்துக் கொள்கிறேன். "உபகாரத்தை நான் நாடாமல், உங்கள் கணக்குக்குப் பலன் பெருகும்படியே நாடுகிறேன். எல்லாம் எனக்கு கிடைத்தது, பரிபூரணமும் உண்டாயிருக்கிறது; உங்களால் அனுப்பப்பட்டவைகளைச் சுகந்த வாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக எப்பாப்பிரோதீத்துவின் கையில் வரப்பற்றிக் கொண்டபடி யால் நான் திருப்தியடைந்திருக்கிறேன்.

என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" பிலிப்பியர் 4:17-19.

80 சதமான வாசகர்களும் உலகபிரகாரமான பத்திரிகை களைப் போல "சந்தா" அனுப்பி பத்திரிகையை மாத்திரம் வாசிக்க விரும்புகிறார்கள், எனவே அவர்களுடைய விருப்பத் திற்கு விட்டுவிடுகிறேன். இதன் விளக்கத்தை விரிவாக தொடர்ந்து அடுத்த மாத பத்திரிகையில் கர்த்தருக்கு சித்த மானால் எழுதுவேன். எனவே வாசகர் தயவாய் இந்த மாத பத்திரிகையை பத்திரப்படுத்தி வைக்கும்படி அன்பாய் கேட்கிறேன்.

வழக்கம் போல இரண்டு கடிதங்களை வெளி யிடுகிறேன் :

Praise the Lord

Nazareth, 11.01.2021

ஐயா,

மிகுந்த அன்புடனும், தாழ்மையோடும் இந்த கடிதத்தைச் சமர்ப்பிக்கிறேன். பல வருடங்களாக வருகையின் பத்திரிகை பெற்று வாசித்து தியானித்து ஜெபித்து வருகிறேன். இதன் மூலம் ஆவிக்குரிய ஜீவியத்தில் பெலப்பட்டு வருகிறேன்.

தபால் ஆபீஸ் தொலைவில் இருப்பதாலும் M.O Form வேறு விதமாக இருந்ததாலும், சரியான ஆள் உதவி இல்லாததால் பணம் அனுப்ப முடியவில்லை. தற்போது பிரயாசப்பட்டு ரூ.500 அனுப்பி வைத்துள்ளேன். என் வயது 80. எனக்கு இரண்டு ஆண்பிள்ளைகள் 1) வயது 55 2) வயது 50 3) ஒருமகள் வயது 52.

வேண்டுகோள் : மூத்தமகன் (வயது 55) 1988-ல் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் படித்து முடித்து விட்டான். 1990-ல் depression போல வந்து சைக்கார்டிக் மாத்திரை சாப்பிட்டுக் கொண்டிருக் கிறான். ஒரு விதமான பயம், கோபம், மனச்சோர்வு, சோம்பலி னால் பாதிக்கப்பட்டு வேலை பார்க்க முடியாமல் இருக்கிறான். நானும் மகனும் தான் வீட்டில் இருக்கிறோம். நானும், மகனும்

(7-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்

- ஊழியங்களுக்காக தினந்தோறும் ஜெபியுங்கள், மாதந்தோறும் தாங்குங்கள்.
- வருடத்திற்கு ஒருமுறை மாத்திரம் காணிக்கை அனுப்பு வோர் குறைந்த பட்சம் ரூபாய் 500 அனுப்புங்கள்.
- **கடிதங்கள், மணியாடர்கள்** அனுப்ப வேண்டிய முகவரி:
  வருகையின் தூதன், நியுபோர்ட்தெரு,நாகர்கோவில்-629 001
  VARUKAYIN THOOTHAN, Newport Street, Nagercoil-629 001.
  Mobile: 95432 21008, 9489740295, **e-mail:**varukayinthoothan@hotmail.com
- **காசோலை** *(Cheque & Draft)*
  வெஸ்லி தேவதாசன் என்ற பெயருக்கு மட்டும் அனுப்பும்படி அன்பாய் கேட்கிறேன்.

பத்திரிகை பணி

A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்

A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

முன்னேற்றப்பணி

A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0000033**

வங்கி வழியாய் காணிக்கை அனுப்புவோர் **(Net Banking)** தயவாய் உடனே எங்களுக்கு **SMS** அனுப்புங்கள், அல்லது அலுவலக செல் நம்பர் **95432 21008** வழியாக தெரிவியுங்கள்.

(1-ம் பக்க தொடர்ச்சி)

1 பேது.2:2; சங்.1:2. வேதவாக்கியங்களால் மனிதனுக்கு நிறைவு, ஞானம், திருப்தி ஆகியவற்றை அளிக்கிறார். இவை சாதாரண மனிதனுக்கு மறைவானவை. மனிதனை வேத வசனத்திற்கு நேராக விசையுடன் இழுத்துக் கொள்கிறார். இவ்வுலக வாழ்வின் பிரயாணத்திற்குப் பாதுகாவலும், இன்றியமையாததுமான விளக்கு, வெளிச்சம், மன்னா, ஆயுதம் போன்ற அனைத்தும் அவரிடமுண்டு.

உலகில் ஆவியானவர் இல்லையென்றால் . . . . .

இன்றைக்கே தேவனிடம் சென்று, ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில், தூய ஆவியானவர் உங்கள் ஆத்துமாவில் ஊற்றப்படும்படியாக கண்ணீரோடு ஜெபியுங்கள். இதற்கு ஆதாரமான சில வசனங்களைக் கீழே குறிப்பிடுகிறோம். "என் கடிந்து கொள்ளுதலுக்குத் திரும்புங்கள்; இதோ என் ஆவியை உங்களுக்கு அருளுவேன்; என் வார்த்தைகளை உங்களுக்குத் தெரிவிப்பேன்" நீதி.1:23. "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது, பரமபிதாவானவர், தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்" லூக்.1:13. கடைசி நாட்களில் ஆயிரக்கணக்கானோர் எழும்பி, தாங்கள் ஜெபித்த ஜெபங்கள் கேட்கப்பட்டதாகவும், அவருடைய கிருபையை அவர்கள் பெற்றுக் கொண்டதாகவும் சாட்சி கூறுவார்கள். ஏனெனில் ஆண்டவராகிய இயேசு கிருபையுள்ளவர். அவர் பாவிகளை ஒருபோதும் தள்ளிவிடாதவர். "அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய், அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்" யோவா.1:12.

எனவே இயேசுவிடம் உங்கள் தேவைகளோடும், உடைந்த உள்ளத்தோடும் தாழ்மையோடும் வாருங்கள். உங்கள் ஆத்துமாவுக்காக கெஞ்சுங்கள். உங்கள் தேவை, குறை, பயம், ஆபத்து போன்ற யாவற்றையும் அறிக்கையிடுங்கள். அவர் உங்களைத் தள்ளிவிடவேமாட்டார்.

உங்களில் ஆவியானவர் இருப்பாராகில்

உங்களிலிருக்கும் ஆவியான வருக்காக நன்றி செலுத்துங்கள். எப்போதும் ஆவியால் நிரம்பியிருங்கள். அவரது ஆசீர்வாதமான அனுபவங்களில் நிலைத்திருங்கள். அவரது நடத்துதலுக்குக் கீழாகவே உங்கள் எண்ணங்களும், வார்த்தைகளும், செயல்களுமிருக்கட்டும். உலகத் தொடர்புகளால் அவரைத் துக்கப்படுத்த வேண்டாம். பாவங்கள் பலவீனங்களால் அவரைத் அணைத்துப் போட வேண்டாம். அவரை அறிகிற அறிவிலும், கிருபையிலும் வளரும்படி ஜெபியுங்கள். ஒரு கலங்கரை விளக்கைப் போல் பிரகாசியுங்கள். தூரத்திலுள்ளவர்களும் உங்கள் வெளிச்சத்தால் நன்மை பெறட்டும். இத்தகைய கிறிஸ்தவ வாழ்வின் மூலம் உள்ளான சமாதானத்தை இவ்வுலகிலும் உறுதியான நம்பிக்கையை மரணத்திலும் அடையவும் நல்ல சாட்சியை பின்பாக வைக்கவும் இறுதியில் அழிவில்லாத கிரீடத்தைப் பெறவும் கூடும்.

ஒரு மிகப்பெரிய ஆவியின் மாரி சபையிலும் உலகத்திலும் ஊற்றப்பட ஜெபியுங்கள். இதுவே இன்றைய மிகப்பெரிய தேவை. அப்போஸ்தலர் காலத்தைக் காட்டிலும் பன்மடங்கான ஊழியர்கள் இன்று இருக்கிறார்கள். ஆனால் நடைபெறும் ஊழியத்தின் அளவு மிகக்குறைவு. நாம் பணிசெய்கிற இடங்களிலெல்லாம் ஆவியானவரின் நிறைவு தேவை. பீடத்திலும், சபை மக்களிலும், பள்ளிகளிலும் ஆவியானவர் செயல்பட வேண்டும். அவர் இருக்குமிடத்தில் ஜீவனும் ஆரோக்கியமும், வளர்ச்சியும், கனியுமுண்டு. இல்லையெனில் மரித்த நிலையும் சடங்காசாரமும், தூக்கமும், குளிர்ச்சியுமே காணப்படும். கிறிஸ்துவின் சபை தூய ஆவியால் எப்போதும் நிரம்பியிருக்க அனுதினமும் ஜெபிப்போமாக.

ஆவிக்கென்று விதையுங்கள் - நித்திய ஜீவனை அறுவடை செய்யுங்கள்

Sow to the Spirit - Reap eternal life

Rich Carmicheal

"ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினால் நித்திய ஜீவனை அறுப்பான்" கலாத்தி.6:8.

தூய ஆவியானவரின் வரம் நமக்கு விலையேறப் பெற்றதாகவும், முக்கியமானதாகவும் இருப்பதால், அவரது பிரசன்னத்தையும், அவரது செயலையும் நம் வாழ்வில் ஏற்றுக் கொள்வதில் கவனமாயிருக்க வேண்டும். ரோமர் 8:5,6 வசனங்களின்படி நாம் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்தியாமல் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்க வேண்டும். "ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்" கலா.5:16. மேலும் தேவனுக்குப் பிரியமானவைகளைச் செய்ய வேண்டும் 1 தெச.4:1. ஆவியானவர் சொல்லுகிற யாவற்றையும் கவனமாகக் கேட்க வேண்டும். அவரது எச்சரிப்புகளுக்கு நமது இருதயங்களைக் கடினப்படுத்தக்கூடாது எபி.3:7-8.

வேத வசனமும் ஜெபமும்

ஆவிக்கென்று விதைப்பதற்கான ஒரு வழி நமது வாழ்வில் வேதவசனத்தை விதைப்பதாகும். தேவ வசனம் என்பது ஆவியின் பட்டயம் (எபே.6:17); தேவன் அதன்மூலம் கிரியை செய்து நமக்கு ஜீவனை அளிக்கிறார் 1தெச.2:13. இயேசுவின் போதனையின்படி நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும், உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும், அறுபதாகவும், முப்பதாகவும் பலன் தருவான் மத்.13:23. இதை மனதிற்கொண்டு வசனத்தைத் தாழ்மையுடன் ஏற்றுக் கொண்டு, யாக்.1:21,22 வசனங்களில் கூறப்படுவது போல கேட்கிறவர்களாக மட்டுமல்ல, வசனத்தின்படி செய்கிறவர்களாகவும் இருக்க வேண்டும்.

இந்நாட்களில் அனேகர் உண்மையானதும், ஆரோக்கியமானதுமான உபதேசத்தை விட்டு விலகிச் செல்லுகிறார்கள் 2 தீமோ.4:3-4. நாம் இப்போது செய்ய வேண்டியது என்ன? இன்னும் அதிகக் கருத்தோடு வேதவசனத்தைப் படிப்பதும், இருதயத்தில் ஏற்றுக்கொள்வதும் அதற்கு கீழ்ப்படிவதும் அதைப் பிரசித்தப்படுத்துவதுமே என்றால் மிகையல்ல. அப்படிச் செய்யும்போது தூய ஆவியானவர் யோவா.14:26-ஐ நமக்கு போதிக்கவும், வேதவசனம் மூலம் கிரியை செய்து நம்மைத் தேர்ச்சியடையச் செய்யவும், நற்கிரியைகள் செய்ய தகுதிப்படுத்தவும், உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனப்படுத்துவார் 2 தீமோ.3:16-17.

நமது ஜெப வாழ்வின் மூலமாகவும், ஆவிக்கென்று விதைக்க முடியும். எபே.6:18-ன்படி எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினால் ஜெபம் பண்ண வேண்டும். அந்தப் படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியது இன்னதென்று அறியாமலிருக்கிறபடியால் ஆவியானவர் தாமே வாக்குக் கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார் ரோமர் 8:26. ஆவியானவரின் மன்றாட்டு மூலமாக ஆவியில் ஏறெடுக்கப்படும் ஜெபம் அதிக தாக்க முடையது. நமது அன்புக்குரியவர்களுக்காகவும், சபைகளுக்காகவும், சமுதாயங்களுக்காகவும், தேசத்திற்காகவும் ஏறெடுக்கும் ஜெபங்களால் மிகுந்த அறுவடை இவ்வுலகிலும் மறு உலகிலும் பெற்றுக் கொள்வோம்.

ஆவிக்கென்று விதைப்பதைக் குறித்து ஒருவர் இவ்வாறு எழுதுகிறார் : "தூய ஆவியானவரின் வழிநடத்துதலின் படியும் அவரது வல்லமையாலும் கிறிஸ்துவில் விசுவாச வாழ்வு வாழ்ந்து, கிறிஸ்தவ கிருபைகளில் பெருகுங்கள்." ஆவிக்கென்று நாம் விதைக்கும்போது, நமது காலம், பெலன், தாலந்துகள் போன்ற தேவன் தந்த நமது உடைமைகளை, தேவமகிமைக்காக, அவரது கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து, தூய ஆவியானவரின் நடத்துதலின்படி, தேவன் வெளிப்படுத்துவதற்கேற்ப பகிர்ந்து கொள்ளுவது அவசியம். வேத வசனத்தைப் போதிக்கிறவர்களுக்கு நம்மிடமுள்ள நன்மைகளை பகிர்ந்து

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்க தொடர்ச்சி)

கொள்ள வேண்டும் கலா.6:9-10. இவை களை நினைவில் கொண்டு நன்மை செய்வதில் சோர்ந்து போகாமலிருப் போம். சோர்ந்து போகாமலிருந்தால் ஏற்ற வேளையில் அறுவடை செய்வோம்.

பெருக விதைத்து பெருக அறுப்போம்

2 கொரி.9:6-ல் ஒரு நியதியைப் படிக்கிறோம். அதாவது 'சிறுக விதைக் கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக் கிறவன் பெருக அறுப்பான்'. எனவே ஆவிக்கென்று திரளாக விதைப்போமாக. வாழ்க்கையை முழுவதுமாக தேவனுக் காக அர்ப்பணிப்பதும், நடக்கையில் ஜாக்கிரதையாயிருப்பதும் அவசியம். "ஆனபடியினால் ..... ஞானமுள்ளவர் களைப்போல கவனமாய் நடந்து நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் ..... கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள் ..... ஆவியி னால் நிறைந்து இருங்கள்" எபேசி.5:15-18.

பரம தந்தையிடம் உங்கள் வாழ்வில் தேவ ஆவியானவரின் அதிக அளவிலான பிரசன்னத்தையும், வல்ல மையையும் கேளுங்கள். அவர் இந்த விலையேறப்பெற்ற வரத்தை ஏராள மாகத் தர வாஞ்சையோடிருப்பதை அறியமுடியும் யோவா.3:34; லூக்.11:13. பாவத்தை விட்டு விலகுவதிலும், ஆவி யானவரை துக்கப்படுத்தாமலிருப்ப திலும் கவனமாயிருங்கள். "ஆவியை அவித்துப் போடாதிருங்கள் .... உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம் முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக" 1 தெச.5:19-22. உங்களில் காணப்படும் அனைத்துப் பாவங்களையும் அறிக்கை செய்து, ஆண்டவர் அவற்றைக் கழுகி சுத்திகரிக் கும்படி ஜெபியுங்கள் சங்.51:1-11.

உங்கள் மனதும், இருதயமும் வசனத்தால் நிரப்பப்படுவதாக. ஜெபத் திலே உறுதியாய்த் தரித்திருங்கள். தூய ஆவியானவரே ஜெபத்தில் உங்களை வழி நடத்த அனுமதியுங்கள். ஆவியின் கனி உங்களில் பெருகும்படி வேண்டிக்கொள் ளுங்கள். "மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடைய வர்களாய், அன்பினால் ஒருவரை யொருவர் தாங்கி, சமாதானக்கட்டி னால், ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்" எபேசி.4:2-3. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் ஆகியவற்றை முற்றிலும் கழுகி சுத்திகரிக்கும்படி ஆண்டவரிடம் கேளுங்கள். தேவன் உங்களைப் பரிசுத் தத்திற்கு அழைக்கிறவரும், தமது பரிசுத்த ஆவியை நமக்கு அளிக்கிறவருமா யிருக்கிறார் 1 தெச.4:7-8; 5:23.

நித்திய ஜீவனாகிய வரம்

ஆவிக்கென்று விதைப்பதால் கிடைக்கவிருக்கும் நித்திய ஜீவனாகிய பரிசுக்காக மகிழ்ந்து களிகூருங்கள். நித்திய ஜீவன் என்பது, நமது எண்ணத் திற்கு மேலானது. "ஒன்றான மெய் தேவ னாகிய உம்மையும் நீர் அனுப்பின வராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்" யோவா.17:3. அவருடைய (தேவனுடைய) குமார னாகிய இயேசுக் கிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள்ளும் இருக்கி றோம்; இவரே மெய்யான தேவனும், நித்திய ஜீவனுமாயிருக்கிறார் 1 யோ.5:20. "நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டா யிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" யோவா.10:10 என்று இயேசு கூறியிருக்கிறார். அவரே ஜீவனாயிருக் கிறார் 1 யோவா.1:1-2; யோவா 14:6. நித்திய ஜீவனாகிய ஈவு இவ்வுலகில் இப்போதே ஆரம்பமாகிறது யோவா.3:36; 1 யோவா.5:11. தொடர்ந்து இதன் மகிமை யான நிறைவேறுதல் நித்திய நித்திய மாகத் தொடரவிருக்கிறது மாற்.10:30; யூதா.21.

குமாரனிலிருக்கும் நித்திய ஜீவனுக்காகக் கர்த்தரைத் துதிப்போம். இந்த வாழ்வை நமக்கு அருளும் நித்திய ஆவியானவருக்காக பெருக விதைப் போம். ஏனெனில் நம்மிலிருந்து ஜீவ னுள்ள நதிகள் புறப்படும் யோவா.7:38. "நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்" யோவா.14:16.

பிரசங்க பீடத்தில் ஆவியின் அபிஷேகம் விளங்க ஜெபியுங்கள்

Pray for the unction in the pulpit

Leonard Ravenhill (1907-1994)

தேவனால் நிரப்பப்பட்ட மற்றும் அக்கினியால் அபிஷேகம் பெற்ற மக்கள் மூலமாகவே எழுப்புதல் ஏற்பட முடியும். இரும்பு போன்ற உறுதியான இருதயமும், சிங்கம் போன்ற வீரமும், பாம்பை போன்ற ஞானமுள்ள தீர்க்கர் களும், ஆவியால் நடத்தப்படுகிறவர் களும், அபிஷேகம் பெற்றவர்களுமான ஊழியக்காரர்கள் இதற்காகத் தேவை. ஏனெனில் சபையின் நிலை பரிதாபம்.

சபை கடன்வாங்கி வாழ்கிறது. சிறந்த ஊழியர்கள் எழும்பி மக்களை உற்சாகப்படுத்த வேண்டும். இதே நிலை நீடிக்கக்கூடாது. ஆவிக்குரிய தன்மையை அடிப்படையாகக் கொண்ட ஜெபம் ஒன்றுதான் இதற்கு ஒரே நிவாரணம்.

ஆவிக்குரிய தன்மையின்றியே பல்வேறு அனுபவங்களின் அடிப்படை யில் பீடத்தில் பிரசங்கங்கள் நடத்தப் படலாம். ஞானம், சக்தி, அறிவு, ஆவல், வாசிக்கும் புத்தகங்கள், சுயநம்பிக்கை ஆகியவற்றின் கூட்டமைப்பில் ஒருவர் எந்த பீடத்திலோ மேடையிலோ பேசலாம். இவை மனிதரில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். ஆனால் தேவனுடைய கரத்தை அசைக்க ஜெபம் தேவை. பிரசங் கம் காலத்தை பாதிக்கும், ஜெபமோ நித்தியத்தை பாதிக்கும்; பீடங்கள் நமது திறமைகளை வெளிப்படுத்தலாம், ஆனால் ஜெப அறை இதற்கு முடிவு கட்டுகிறது.

இந்த நாட்களின் துக்கமான செய்தி என்னவெனில் பீடங்களிலிருந்து ஏராளமான மரித்த பிரசங்கங்கள் மரித்த மக்களுக்குப் பிரசங்கிக்கப்படுகின்றன.

அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்

ஆவியின் அபிஷேகமின்றி பிரசங் கிப்பது அன்னியமானது. அது ஜீவனளிப் பதற்குப் பதிலாக ஜீவனை எடுத்துவிடு கிறது. வெளிப்படும் வார்த்தைகள் கொழுந்துவிட்டு எரிய அபிஷேகம் தேவை.

பிரசங்கித்தல் ஒரு ஆவிக்குரிய செயல். மூளையிலிருந்து பிறக்கும் பிரசங்கம் மனித மூளையை மட்டுமே எட்டும். ஆனால் இருதயத்திலிருந்து எழும்பும் பிரசங்கம் இருதயங்களைத் தொடும். ஆவிக்குரிய சிந்தையுடைய ஒரு பிரசங்கிதான் ஆவிக்குரிய சிந்தை யுடைய மக்களை உருவாக்க முடியும்.

அபிஷேகம் பெற்றவன் என்பது தேவனுடைய சேனையிலுள்ள பிரசங்கி

அபிஷேகம் கற்றுக் கொள்ளக் கூடியதல்ல. அது ஜெபத்தின் மூலம் சம் பாதிக்கப்படக்கூடியது. தேவ ராஜ்யத் தின் சேனைவீரனாக ஜெபத்தில் போராடி வெற்றி பெறுகிறவனே அபிஷேகம் பெற்றவன். பீடத்தில் நின்று கொண்டு புத்திபூர்வமான குண்டு களையும், வேடிக்கையான வார்த்தை களையும் பேசுவதல்ல, ஜெப அறையில் அபிஷேகத்தைப் பெறவேண்டும். அபிஷேகத்தோடு பீடத்தில் ஏறினால் கேட்கிற மக்கள் ஆதாயப்படுத்தப் படுவார்கள், இல்லையென்றால் அவர் களை இழக்க நேரிடும்.

அபிஷேகம் பெறாத ஊழியர் களால் பாவ உணர்வடைய ஆவலுள்ள மக்களை எழுப்ப முடியாது. மீன் பிடிக் கும் வள்ளங்களில் நவீன கருவிகளைப் பொருத்தியும், பல மாதங்கள் உழைத் தும் மீன்கள் கிடைக்கவில்லை. காரணம் என்ன? ஏதோ ஒரு குறைவு காணப் படுகிறது.

நூற்றுக்கணக்கான சபைகளின் பீடங்கள் பல்லாண்டுகளாக ஆத்துமாக் களைப் பிடிக்க முடியாமலிருக்கின்றன. ஏன்? வேதவசனம் சரியாகப் போதிக்கப் படவில்லை. "என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல் அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரிய மாகும்படி வாய்க்கும்" ஏசா.55:11.

பலிபீடத்தில் அக்கினி அவிந்து போனது, அல்லது அது மிகவும் குறை வாக எரிகிறது. ஜெபக் கூடுகைகள் மந்த மாகிவிட்டன. அணையும் நிலையிலிருக் கின்றன. ஜெபக் குறைவால் ஆவியில் ஆரம்பித்த நாம் மாம்சத்தில் முடிக்கப் போகிற நிலையிலிருக்கிறோம். உங்கள் சபையில் ஊழியம் செய்கிறவர் எவ்வளவு நேரம் ஜெபிக்கிறார் என்று யாராவது

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

கேட்டிருக்கிறீர்களா? ஜெபத்தில் சமயம் செலவு பண்ணாதவர்கள் ஊழியத்திற்குத் தகுதியுடையவர்கள் அல்ல.

பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடினீர்களா? யூதா.3. மனிதர்களைப் பிடிக்க வேண்டிய ஊழியக்காரர் மனிதரிடமிருந்து ஏதேனும் கிடைக்குமா என்று எதிர்பார்க்கின்றனர். முன் நாட்களில் ஊழியர்கள் விதைகளை விதைத்தனர். இன்றோ புத்திகூர்மையின் முத்துக்கள் கோர்க்கப்படுகின்றன. முத்துக்கள் முளைப்பதில்லையே! அவை பலன் தருவதுமில்லையே.

பிரசங்கங்கள் கருவறை (ஜெப அறை)யில் பிறப்பதற்கு பதிலாக கல்லறையிலிருந்து பிறக்கின்றன. எனவே அவை மரத்துப்போனதும், வல்லமையற்றதுமாயிருக்கின்றன. அக்கினியற்றதும் ஜெபமற்றதுமான ஆத்துமாவிலிருந்து அவை எழும்புகின்றன. **பிரசங்கிக்கிறவர்கள் மரிப்பார்கள், ஆனால் ஜெபிப்பவர்கள் மரிப்பதில்லை.** தேவன் உங்களை ஊழியத்திற்கு அழைத்ததுண்டானால் நீங்கள் நிச்சயம் ஆவியின் அபிஷேகத்தைப் பெறுவது மிகமிக அவசியம்.

முன்நாட்களில் பிரசங்கிக்கிறவர்கள் முழங்காலில் நின்று வேத பகுதிகளை வாசித்து தியானித்து, தங்கள் கண்ணீரால் அவற்றை நனைத்து ஆவியின் வேதனையோடு கதறி ஜெபித்து பின்பு அவற்றை மக்களிடம் பகிர்ந்து கொண்டனர். அவை உயிருள்ள செய்திகளாக தேவனுடைய அனலுள்ள இருதயத்திலிருந்தும் பிரசங்கிக்கிறவரின் இருதயத்திலிருந்தும் புறப்பட்டு, கேட்கிறவர்களின் இருதயத்தை அனல்படுத்தி கொளுந்துவிட்டு எரியச் செய்தது. இதற்குக் காரணம் ஜெபம் தான். ஜெபத்திற்கு ஈடானது எதுவுமே இல்லை. ஜெபத்தின் விளைவாக தேவன் எதைச் செய்யக்கூடும் என்பதை விஞ்ஞானத்தில் மூழ்கிப்போன இத்தலைமுறை மக்கள் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஜெபிக்கும் சபையை கருவறை என்று கூறலாம். ஜெபிக்காத சபையோ கல்லறைக்கு இணையானது. ஜெபிக்காத ஒரு போதகர் மிகப்பெரிய தோல்வியாளர். எழுப்புதல் தேவனுடைய சித்தம். தேவனுடைய இரண்டாம் வருகையைத் தவிர இன்று சபையின் மிகப்பெரிய தேவை எழுப்புதலாகும்.

எழுப்புதலைப் போதிக்கவோ விலைக்கு வாங்கவோ கூடாது. அதற்கான வழிமுறைகளை வேதம் கூறுகிறது. சபை அதற்குரிய மக்களை உருவாக்குகிறது. தூய ஆவியானவரின் மன்றாட்டு அது வருவதற்கான வாய்க்காலை ஏற்படுத்துகிறது. எழுப்புதலின் தாமதத்திற்குக் காரணம் தேவனல்ல. அவரால் எல்லாம் கூடும். நாம்தான் குறைவுடனிருக்கிறோம். நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவர் எபே.4:20. நீங்கள் விசுவாசிகளானபோது பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா? அப்.19:2.

தூய ஆவியானவர் மூலம் பாடுகளின் மேல் வெற்றி

Victory through the Holy spirit over suffering

Samuel Brengle (1860-1936)

பாடுகளை ஏற்றுக்கொள்வதின் அடிப்படையில் ஆவியால் நிரப்பப்பட்ட ஒருவரையும் நிரப்பப்படாத ஒருவரையும் பிரித்தறியலாம்.

ஆவியால் நிரப்பப்பட்டவர்கள் வெற்றிபெறும் விசுவாசத்தோடும் பிரகாசிக்கும் முகத்தோடும், உறுதியான இருதயத்தோடும் பாடுகளை மகிமையான அனுபவமாக்கி, சந்தோஷமாக இருப்பார்கள். அப்போஸ்தலரிடம் இந்த நிலை காணப்பட்டது. "அவருடைய நாமத்திற்காகத் தாங்கள் அவமான மடைந்ததற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால் சந்தோஷமாய் ஆலோசனை சங்கத்தை விட்டுப் புறப்பட்டு போய்....." அப்.5:41.

ஆவியால் நிரப்பப்படாதவர்கள் சந்தேகமும் பயமும் நிறைந்து முறுமுறுக்கிறவர்களும் பராது சொல்லுகிறவர்களுமாயிருப்பார்கள். அவர்கள் கடின இருதயமும் திருப்தியற்ற நிலையும் கொண்டவர்கள். ஆவியால் நிரப்பப்பட்டவர்கள் தாங்கள் திரளான தூதர்களுடைய பாதுகாவலை உணரும்போது ஆவியால்நிரப்பப்படாதவர்கள்சத்துருவை கண்டு திகைத்து நிற்பார்கள் சங்.34:7.

போதகர் ஒருவர் தன் சபை மக்களைச் சந்திக்க காலையில் சென்றார். இரண்டு சகோதரிகளை அவர் வெவ்வேறு இல்லங்களில் சந்தித்தார். முதலாவது சகோதரியிடம் எப்படியிருக்கிறீர்கள் என்று விசாரித்தபோது, "ஐயா இரவு முழுவதும் சரீர வேதனையால் படுக்க முடியாமல் அவதிப்பட்டேன். என் தேவன் எனக்கு இந்த வேதனையை அனுமதித்தாரோ" என்று அங்கலாய்த்தாள். அவள் தூய ஆவியால் நிரப்பப்படாததால் தேவனோடுள்ள தொடர்பு குன்றியிருந்தது. எனவே அவளது பாடுகள் பெரிதாகத் தோன்றி ஆறுதலடையக் கூடாதவளாயிருந்தாள்.

அடுத்த இல்லத்தில் வாழ்ந்த சகோதரியிடமும் போதகர் எப்படியிருக்கிறீர்கள் எனக் கேட்டார். "இரவு முழுவதும் சரீர வலியால் அதிக வேதனைப்பட்டேன்" என முகமலர்ச்சியுடன் கூறிய அவள் தொடர்ந்து, "ஆனாலும் இயேசு என் அருகில் ஆதரவாயிருந்தபடியால் இந்தக் கஷ்டத்தை விடக் கூடுதலான கஷ்டத்தையும் அவர் அனுமதித்தால் நான் மகிழ்வுடன் சகிப்பேன்" என்றாள். அவளது வியாதிப்படுக்கை மகிமையின் அறையாக மாறியிருந்தது என்று வெற்றியுடன் பகிர்ந்துகொண்டாள். அவள் இருதயம் சமாதானத்தால் நிரம்பியிருந்தது. தூய ஆவியானவராகிய தேற்றரவாளன் அவள் இருதயத்தை நிரப்பியிருந்தார்.

ஆவியால் பலப்படுத்தப்படுதல்

அப்.பவுலைப் போல அஞ்சா நெஞ்சுடன் பாடுகளை சுமந்தவர்கள் இருக்கமுடியாது. அவர் கடினமாக உழைத்தார். வேதனையான சோதனைகளை சகித்தார். கொடிய எதிரிகளால் வந்த ஏமாற்றங்கள், சதித்திட்டங்கள் போன்றவற்றைத் தாமாகவே முன்வந்து சகித்தார். கப்பற் சேதங்களிலும், சிறை வாழ்விலும், குளிரிலும், பசி பட்டினியிலும் தனிமை வேளைகளிலும் அவர் சோர்ந்து போகவில்லை.

எந்த பராதும் குறையும் சொல்லாத அவர் "உபத்திரவங்களிலே மேன்மை பாராட்டுகிறோம்" ரோமர் 5:4 என்று வெற்றி முழக்கமிடுகிறார். மேலும் "எங்களுக்கு உண்டான சகல உபத்திரவத்திலேயும் பரிபூரண சந்தோஷமாயிருக்கிறேன்" என்றும் எழுதுகிறார் 2 கொரி.7:4. இதற்கு மேலாக "ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பல வீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்" 2 கொரி.12:10 என்கிறார். அப்.16-ம் அதிகாரத்தில் கூறப்படும் சம்பவம் மேன்மையானது. பவுலும் சீலாவும் சுவிசேஷத்தினிமித்தம் அனேக அடிகள் அடிக்கப்பட்டு, உட்காவலறையில் அடைத்து கால்களைத் தொழுமரத்தில் மாட்டிவிட்டார்கள். அடுத்தநாள் அவர்கள் கொலை செய்யப்படுவதற்காக நியமிக்கப்பட்ட நாள். ஆனால் நடுராத்திரியிலே அவர்கள் தேவனை பாடித் துதித்தார்கள் அப்.16:25.

இதன் இரகசியம் என்ன?

"தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால்" ரோமர் 5:5 என்று படிக்கிறோம். அவர் எபேசிய சகோதரருக்காக ஏறெடுத்த ஜெபம் அவருடைய இருதயத்திலேயே பதிலளித்துவிட்டது (எபேசி. 3:16-17 படிக்க)

அவருக்குள் வாசம் செய்த விசுவாசம் அவருக்கு உள்ளான பலத்தையும் தைரியத்தையும் அளித்தது. அவர் பாடுகளையும் சோதனைகளையும் சந்தோஷமாகவும், நன்றியுடனும் ஏற்றுக் கொள்ள உதவியாயிருந்தது.

அசையாத நம்பிக்கை

பாடுகளில் வெற்றி பெறுவதற்காக நமது ஆத்துமாவை ஆண்டவர் வசப்படுத்தி உணர்ச்சிவசமான நிலைக்குக் கொண்டு வருவதில்லை. மாறாக விசுவாசத்தின் மூலம் ஆத்துமாவுக்கு இனிய தொடர்பை ஏற்படுத்தி பலப்படுத்துகிறார்.

(6-ம் பக்கம் பார்க்க)

உத்தம ஜெபம் பழுக்கக் காய்ச்சின இரும்பை போல வெப்பத்துடன் எழும்பி வெப்பத்துடன் பதிலைக் கொண்டுவரும்.

(5-ம் பக்க தொடர்ச்சி)

முதலாவது அது சுயாதீனமாகவும் முழுமையாகவும் கிறிஸ்துவில் அங்கீகரிக்கப்படுகிறது. இரண்டாவது, தவறு செய்யாத ஆண்டவரது ஞானத்தால் அளக்கப்பட்டு, அன்பினால் அனுமதிக்கப்படுகிறது. மூன்றாவதாக விவரிக்க முடியாத கஷ்டங்களும் "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்ட வர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிற வர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" ரோமர் 8:28. இது கொஞ்சகால பாடுதான். வருங்கால ஆசீர்வாதத்திற்கு முன் இது ஒன்றுமில்லை. இந்நிலை நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது 2 கொரி.4:17. நான்காவதாக சூளை சாதாரணமாக சூடாக்கப்படுவதைவிட 7 மடங்கு அதிகமாக சூடாக்கப்பட்டாலும் அதன் மத்தியில் நம்மோடு உலாவுகிற தேவன் இருக்கிறார். "அவருடைய சாயல் தேவகுமாரனுக்கு ஒப்பான சாயல்" தானி.3:25. சத்துருக்கள் வெற்றி பெற்றதுபோல நம்மைச் சிங்கத்தின் குகையிலே போட்டாலும், நமக்கு முன்னதாக தேவதூதன் அங்கு இறங்கிச் சென்று சிங்கங்களின் வாயைக் கட்டுவார். சத்துரு கூர்மையான ஆயுதங்களை உருவாக்கினாலும், அவருடைய சத்தியம் நமக்குப் பரிசையும் கேடகமுமாகும்.

எல்லா தேவபிள்ளைகளும் இவ்வாறு பாடுகளில் வெற்றிபெறுவதில்லை. ஆனால் விசுவாசத்தினால் தங்கள் இருதயங்களைத் திறந்து ஆவியால் நிரப்பப்பட்டவர்கள் மட்டுமே இந்த அனுபவத்தை அடைய முடியும்.

சிம்சோன் வாசல் நிலைகளைப் பிடித்து அசைத்து அரங்கத்தையே விழச்செய்தது போல பரலோக வாசலை ஜெபம் அசைக்க வேண்டும்.

ஒரு இரட்சண்ய சேனை அலுவலரின் சாட்சி

பாவியாயிருந்த எனது வாழ்வு வெளியேயிருந்து பார்க்கும்போது எளிதானதாகவும் கலக்கமற்றதாகவுமிருந்தது. எனவே நண்பர்கள் பொறாமைப்படக் கூடியதாயிருந்தது. இது ஒரு வெளிப்படையான நிலை மட்டுமே. ஆனால் உண்மை நிலையோ மாறாயிருந்தது.

அனைத்து இன்ப வேட்கை, சோம்பல், பொறுப்புகளில் உதாசீனம் இவைகளோடு என் வாழ்வு தேவனை விட்டு தூரமாயிருந்தது. எனக்குள் அதிக பயம், பாரம், கவலை, ஏமாற்றம் ஆகியவை அடிக்கடி தோன்றின. சிறு சிறு காரியங்களுக்கும் பாரமடைந்ததோடு, மரணபயம் என்னை ஆட்கொண்டது.

ஆனால் நான் என்னை முற்றிலுமாக தேவனுக்கு அர்ப்பணித்தபோது என் தலைக்குமேல் வந்த புயல்களில் தேவபிரசன்னம் என்னில் இருந்தபடியால் எந்த வேதனையையும் நான் உணரவில்லை.

இதுவே விசுவாசம். இவ்வுலகின் தீமைகளுக்கு மேலாக நம்மில் வாசம் பண்ணும் ஆசீர்வாதமான ஆவியான வரின் நிரப்புதல் வெற்றி வாழ்வைத் தருகிறது. அவர் நம்மில் வாழும் தேற்றரவாளன்.

கைவிடப்பட்டவர்களின் சந்தோஷம், அலைந்து திரிபவரின் வெளிச்சம்

பாவ உணர்வடைவோரின் நம்பிக்கை நிச்சயமான பரிந்துரையாளர்

இங்கு தேற்றரவாளன் மெல்லிய குரலில் பேசுகிறார்

பரலோகம் ஆரோக்கியமளிக்க இயலாத துக்கம் பூமியிலில்லை

ஆவியில் ஜெபிப்பதற்கான அடையாளங்கள்

Marks of praying in the spirit

Chorles H. Spurgeon

ஆவியில் ஜெபிப்பதின் முக்கிய பகுதி அதின் வல்லமையிலும், போதனையிலும் மட்டுமல்ல ஆவியானவர் உதவி செய்யும் விதத்திலும் அடங்கியிருக்கிறது.

தேவனிடத்தில் சேருகிறவன் தேவன் உண்டு என்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும். "தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்". தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்" யோவா.4:23-24.

முதலாவதாக ஜெபத்தின் தேவை, நாம் உண்மையுடன் ஜெபிப்பதாகும். தேவ ஆவியானவர் நமது வீணான மனதை உத்தமமும் பயபக்தியும் உண்மையுமுடைய நிலைக்கு நேராக வழிநடத்த வேண்டும். உண்மையான ஜெபம் என்பது வெறும் வார்த்தைகளை வெளிப்படுத்துவது அல்ல. நமது வார்த்தைகள் அர்த்தமுடையவைகளாகவும் நமது இருதயம் வியாகுலம் நிறைந்ததாகவும் உறுதியான வாஞ்சை பெருமூச்சு ஆகியவற்றை வெளிப்படுத்த வேண்டும். தூய ஆவியானவரால் தூண்டப்படுகிற ஆவிக்குரிய மனிதன் மட்டுமே இப்படி ஜெபிக்க முடியும். அவன் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வாஞ்சையும், பெருமூச்சும், கண்ணீரும் எழும்புகின்றன. அது தேவனுக்கு முன்பாக அவனது ஆத்துமாவிலிருந்து எழும்புகிறது. சத்திய ஆவியானவரின் நடத்துதலின்படி அவன் உத்தமத்தோடு இந்த இதயபூர்வமான ஜெபத்தை ஏறெடுக்க முடிகிறது. தூய ஆவியில் ஜெபிப்பது என்பது ஊக்கத்துடன் ஜெபிப்பதாகும்.

குளிர்ந்த ஜெபங்கள், கேட்கப்பட வேண்டியதின் அவசியத்தை உணராமல் ஏறெடுக்கப்படும் ஜெபங்களாகும். எனவே ஊக்கமற்ற ஜெபங்கள் ஏறெடுக்கப்படாமலிருப்பதே நலம். உத்தம ஜெபம் பழுக்கக் காய்ச்சின இரும்பை போல வெப்பத்துடன் எழும்பி வெப்பத்துடன் பதிலைக் கொண்டுவரும். இத்தகைய ஜெபம் செய்ய தூய ஆவியானவர் மட்டுமே உதவி செய்ய முடியும். சிம்சோன் வாசல் நிலைகளைப் பிடித்து அசைத்து அரங்கத்தையே விழச்செய்தது போல பரலோக வாசலை ஜெபம் அசைக்க வேண்டும். "நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மை போகவிடேன்" ஆதி. 32:26 என்றது போன்ற உறுதியுடன் ஜெபிக்க வேண்டும். இவ்வாறு ஜெபிக்கக் கற்றுக்கொள்ளுவோமாக.

அடுத்தபடியாக சோர்ந்து போகாமல் ஜெபிக்க வேண்டும். பந்தயத்தில் ஓடுகிறவன் முதலாவது விரைந்து ஓடலாம். நேரம் செல்ல செல்ல தளர்வடைவது போல ஜெபம் காணப்படக்கூடாது. ஆரம்பத்தில் உற்சாகமாக ஜெபிக்கிறவர்கள் நாளடைவில் சோர்ந்து போவதுண்டு. மனித ஆவி சோர்ந்து போகக் கூடியது. எனவேதான் தூய ஆவியானவரின் துணை தேவையாயிருக்கிறது. மாம்ச பெலன் குறைந்தது, எனவே குறைந்து கொண்டே வரக்கூடியது. ஆனால் தூய ஆவியால் ஒருவர் நிரப்பப்பட்டிருக்கும்போது ஜெபிக்கிறதற்கான பதில் தாமதித்தாலும் ஜெபத்தின் விசை குறைவதில்லை. எவ்வளவு நேரம் வாசல் பூட்டப்பட்டிருந்தாலும் அவ்வளவு நேரமும் தட்டிக்கொண்டே இருப்பான். தூதன் நேரமாகிவிட்டது நான் போக வேண்டும் என்று சொன்னாலும் ஆசீர்வாதத்தை பெறாமல் விடவேமாட்டான். கண்ணீர் மட்டுமல்ல விடாப்பிடியான மேற்கொள்ளும் ஜெபம் தேவபார்வையில் அழகானது. இல்லை என்ற பதிலை நான் ஏற்கமாட்டேன். ஆனால் இந்த ஆசீர்வாதத்தை எனக்குத் தந்துதான் ஆகவேண்டும். ஏனெனில் நீர் வாக்குப் பண்ணியிருக்கிறீர், என்னிடம் கேட்க வேண்டும் என்றும் நீர் சொல்லியிருக்கிறீர்; நீர் மாறாதவர் என்று நம்புகிறேன் என்று ஜெபிக்க வேண்டும். இது ஆண்டவருக்குப் பிரியமானது.

ஆவியில் ஜெபிக்க மனம் தூய்மையாயிருக்க வேண்டும். மனம் சிதறலடைகிறதா? தூய ஆவியானவர் உள்ளத்தில் வரும்போது நமது இதயமாகிய ஆலயத்தில் அவர் சாட்டையோடு வந்து விற்கிறவர்களையும் கொள்ளுகிறவர்களையும் துரத்தியடிப்பார். அப்போது இருதயம் சுத்திகரிக்கப்படும். அப்போது தேவனை நெருங்கிச் சேருகிறோம் என்ற ஒரே எண்ணத்துடன் ஜெபிக்க முடியும்.

நம்மைத் தாழ்த்தி ஜெபிப்பது இன்னொரு முக்கிய பகுதியாகும். தூய ஆவியானவர் பெருமைக்கு எதிரானவர். அவர் நமது பாவத்தைக் கண்டித்து உணர்த்தும்போது நாம் அவருக்கு முன்பாக ஆவியில் நொறுங்கி, பணிந்து குனியவேண்டும். ஆயக்காரனைப் போல தாழ்மையுடன் ஜெபிக்காவிட்டால் நீதிமானாக்கப்பட முடியாது.

ஜெபம் விசுவாசம் நிறைந்ததாயிருப்பது அவசியம். விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற ஆண்டவர் மேல் விசுவாசத்துடன் ஜெபிக்க வேண்டும். தூய ஆவியானவரின் மேல் விசுவாசம் பலப்படுத்தப்பட வேண்டும்.

தூய ஆவியானவர் மூலம் மேற்கூறிய விலையேறப் பெற்ற பண்புகளைப் பெற்று வல்லமையுடன் ஜெபிப்போம்.

(2-ம் பக்க தொடர்ச்சி)

பட்ட உபத்திரவம், பாடுகள் விவரிக்க முடியாது. இதுவரை நம் தேவன் என்னையும் மகனையும் ஏந்தி தாங்கி சுமந்து ஆற்றி தேற்றி அரவணைத்து வருகிறார். வயது ஆக ஆக மகன் மேல் உள்ள பாரம், கவலை தினம் நம் ஆண்டவர் பாதத்தில் வைத்துவிடு கிறேன். பட்ட பாடுகளிலிருந்து கர்த்தர் விடுவித்து வருகிறார். ஜெபித்து கொள்ளும் படி பணிவன்புடன் வேண்டுகிறேன்.

உங்கள் அன்பு மகள்,
S.D., Rtd. Teacher

*****

பெருமாள்புரம், 19.01.2021

Brother,

கர்த்தருடைய நாமத்தினால் உங்கள் அனைவரையும் வாழ்த்து கிறோம்.

மாதந்தோறும் வருகையின் தூதன் ஒழுங்காக பெற்று ஆவிக்குரிய செய்தியை அறிந்து கர்த்தரை ஸ்தோத் தரிக்கிறோம். சரீர பெலவீனத்தின் நிமித்தமும் கர்த்தருக்காக நீங்கள் செய்து வரும் ஊழியங்களுக்காக ஜெபிக்கி றோம். தேவன் தமது கிருபையினாலும், வல்லமையினாலும் சகல தேவைகளை சந்தித்து ஆசீர்வதிப்பார். ஊழியங்களுக் காக ரூ.500 அனுப்பி இருக்கிறோம். எங்கள் குடும்பங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். பயங்கரமான சூழ்நிலை யிலும் தேவன் அற்புதமாக பாதுகாத்து வழிநடத்துகிறார்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும் பரிசுத்த பிதாவின் அன்பும் பரிசுத்த ஆவியானவரின் ஐக்கியமும் நம் அனைவரோடும் இருப்பதாக! அல்லேலூயா!!

உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்பு,

அன்புடன், P.K.J

*****

சில ஆண்டுகளுக்கு முன்னால் கோயம்பத்தூர் பட்டணத்திலுள்ள ஒரு சபைக்கு உபவாச ஜெபம் நடத்தச் சென்றோம். பிறருக்குத் தெரியாமல் ஒரு புது வேதாகமத்தை பரிசு வழங்க என்னோடு எடுத்துச் சென்றேன். செய்தி வேளையில், வேதாகமத்தை திறந்து பாராமல் எரேமியா 9:1-யை சொல்லுகிற வர்களுக்கு ஒரு வேதாகமம் பரிசளிக்கப் போகிறேன் என்று அறிவித்தேன், ஒரு வரும் இல்லை. கடைசியாக ஒரு சகோதரி பாதி வசனத்தைக் கூறினார்கள். அவர்களுக்கு சபைப் போதகர் மூலமாக பரிசளித்தேன்.

வருகையின் தூதன் எதற்காக, எந்த நோக்கத்தோடு அச்சிடப்படுகிறது என்பதை இயேசப்பாவின் வார்த்தை களிலிருந்து எழுதி அனுப்புகிற ஒருவருக்கு கர்த்தருக்குச் சித்தமானால் டிசம்பர் மாதம் ஒரு அழகிய கொரியன் பிரின்ட் வேதாகமம் பரிசளிக்கப்படும்.

ஏவுதல்

சில ஆண்டுகளுக்கு முன்னால் என்னுடைய தொலைபேசி எண்ணுக்கு ஒரு அழைப்பு வந்தது. மறுமுனையில் பேசியவர், ஐயா, என் பெயர் **சேம் செல்வராஜ்**, பத்திரிகையில் மாதந்தோறும் உபவாச ஜெபம் நடத்த போவதாக எழுதியிருந்தீர்கள். என்னுடைய உள்ளத் தில் ஒரு **ஏவுதல்** என்று கூறினார்கள். இதை நான் கொஞ்சமும் எதிர்பார்க்காத தினால் ஆச்சரியப்பட்டேன். நடந்த தென்ன?

ஒவ்வொரு உபவாச ஜெபத்திற் கும் அவர் எங்களுடனே கூட வருவார். நாங்கள் சேர்ந்து பிரயாணம் பண்ணு வதற்கு வசதியாக நாகர்கோவில் ரயில் நிலையத்திலேயே எல்லோருக்கும் பயணச் சீட்டு எடுத்துக்கொள்வோம். நானும், மகனும், ஒரு பாஸ்டரும் நாகர்கோவில் ரயில் நிலையத்திலும், அந்த சகோதரன் திருநெல்வேலியிலிருந்தும், ஒரு போதகர் விருதுநகரிலிருந்தும், ஒரு மிஷனெரி மதுரையில் இருந்தும் ஏறிகொள்வோம். இந்த சகோதரன் உபவாச ஊழியத்திற்கு தனியாக காணிக்கை கொடுப்பார், அவருடைய ரயில் கட்டணத்தையும் தந்து விடுவார்.

ஒரு உபவாச ஊழியத்திற்குச் செல்ல வேண்டிய நாளில் அவருடைய உறவினர் ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். எனவே நம்முடைய சகோதரர் நெல்லை ரயில் நிலையம் வந்து வழக்கமான காணிக் கையை தந்து எங்களை வழியனுப்பிச் சென்றார். கர்த்தருடைய பிள்ளையே கர்த்தர் உன்னை ஏவவில்லையா?

ஏற்கெனவே நான் முதலாவது எழுதின கோயம்பத்தூர் உபவாச ஜெபத்திற்கு, அந்த சபையைச் சாராத, நம்முடைய வாசக தாயார் ஒருவர் வந்திருக்கிறார், எனக்கு தெரியாது. அவர் தன்னுடன் வேறு இரண்டு சகோதரி களையும் அழைத்து வந்திருக்கிறார். கூட்டம் முடிந்த பிற்பாடு அவர்கள் மேடைக்கு வந்து மிகவும் மகிழ்ச்சியாய் பேசினார்கள், அந்த இரண்டு சகோதரி களையும் அறிமுகப்படுத்தினார்கள்.

சில நாட்களுக்குப் பின்னால் மூன்று சகோதரிகளும் இணைந்து ரூபாய் 30,000 அனுப்பியிருந்தார்கள். அதில் வருகையின் தூதன் ஊழியத்திற்கு ரூபாய் 10,000, என்னோடு இணைந்து வந்த மிஷனெரி சகோதரருடைய **இந்திய அருட்பணி இயக்கத்திற்கு** (IEM) ரூபாய் 10,000, என்னோடு இணைந்து ஊழியம் செய்த **குஜராத் மிஷனெரி** பணிக்கு (NIMS) ரூபாய் 10,000 என்று தொலை பேசியில் தொடர்பு கொண்டு பேசினார்கள். இந்திய அருட்பணி இயக்கத்தைப் பற்றி நான் வாசகருக்கு எழுத வேண்டிய அவசியமில்லை. ஆனால் குஜராத் ஊழியத்தைப் பற்றி ஒரு சிறு அனுப வத்தை மாத்திரம் கீழே எழுதுகிறேன்.

என்னுடைய சகோதரி புருஷன் காலஞ்சென்ற Rev. C. **சாமுவேல்** அவர்கள் கன்னியாகுமரி C.S.I அத்தியட்சா தீனத்தில் போதகராக இருக்கும் போது **வட இந்திய மிஷனெரி சங்கம்** என்ற பெயரில் இந்த ஊழியத்தை 1981-ம் ஆண்டு ஆரம்பித்தார்கள்.

அவர்கள் மறைந்த பின் எனது சகோதரி (82 வயது) தொடர்ந்து இந்த ஊழியத்தைச் செய்து வருகிறார்கள். ஒரு விசை நெருக்கடியான ஒரு சூழ்நிலையில் ஒரு புது ஆலயத்தை திறந்து வைக்க என்னை அழைத்திருந்தார்கள். நான் ரிப்பன் வெட்டி திறந்து வைத்து சிறப்புச் செய்தி அளித்தேன். இந்த நிகழ்ச்சிக்கு முந்தின நாளும், பிற்பாடும் அவர்கள் குஜராத்தில் கட்டியிருந்த அநேக ஆலயங் களை நேரில் சென்று பார்த்து ஒரு சில நிமிடங்கள் ஜெபித்து வந்தோம். எனது தகப்பனார் காலங்சென்ற பாஸ்டர் S. **தேவதாசன்** அவர்கள் ஞாபகார்த்தமாகவும் ஒரு ஆலயத்தை கட்டியிருக்கிறார்கள். அங்கே முழங்காற்படியிட்டு ஜெபித் தேன். அருமையான கர்த்தருடைய பிள்ளைகளே கர்த்தர் உங்களை ஏவ வில்லையா?

இந்த கொரோனா காலங்களி லும் ஒரு மாதம் கூட தவறாமல் ஒரு தேவ பிள்ளை மாத காணிக்கையை தபால் அலுவலகம் சென்று அனுப்பியிருந்தார் கள். இன்னொரு தேவ பிள்ளை கொரோனாவின் கொடூரமான தாக்கு தலின் காலங்களில் இரண்டு மாதங்கள் அனுப்பாதிருந்தார்கள். அதன் பின் மூன்று மாதங்களுக்கான காணிக்கையை சேர்த்து அனுப்பியிருந்தார்கள்.

ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் (Rtd. Tr., Rtd. E.B Foreman) முதல் ஓய்வுபெற்ற வங்கி ஊழியர் வரை மாதந்தோறும் தொடர்ந்து வருகையின் தூதன் ஊழியத் திற்கு 'மாத காணிக்கை' அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களெல் லாரும் இருதயத்தில் ஏவப்பட்டே மாத காணிக்கை அனுப்புகிறார்கள். கர்த்தர் உங்களை ஏவவில்லையா?

'ஏவப்படுவது' வேத புத்தக அனுபவமா?

1. பின்பு அந்த ஸ்திரீ ஒரு குமார னைப் பெற்று, அவனுக்குச் சிம்சோன் என்று பேரிட்டாள்; அந்தப் பிள்ளை வளர்ந் தது, கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார்.

அவன் சோராபுக்கும் எஸ்தா வோலுக்கும் நடுவிலுள்ள தாணின் பாள யத்தில் இருக்கையில் கர்த்தருடைய ஆவியானவர் அவனை **ஏவத்துவக்கினார்** நியாயாதிபதிகள் 13:24,25.

2. அப்பொழுது சிமியோன் என் னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் எருசலேமில் இருந்தான்; அவன் நீதியும் தேவ பக்தியும் உள்ளவனாயும், இஸ்ர வேலின் ஆறுதல் வர காத்திருந்தவனாயும் இருந்தான்; அவன் மேல் **பரிசுத்த ஆவி** இருந்தார்.

கர்த்தருடைய கிறிஸ்துவை காணுமுன்னே நீ மரணமடைய மாட்டாய் என்று பரிசுத்த ஆவியினாலே அவனுக்கு அறிவிக்கப்பட்டுமிருந்தது. அவன் **ஆவியின் ஏவுதலினால்** தேவால யத்திலே வந்திருந்தான் லூக்கா.2:25-27.

3. வேதத்திலுள்ள எந்தத் தீர்க்க தரிசனமும் சுயதோற்றமான பொருளை யுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது.

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் **பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு** பேசினார்கள் 2 பேதுரு 1:20,21.

இந்த 3 சந்தர்ப்பங்களிலும் **'ஆவியானவர்'** என்ற வார்த்தை வருவதைக் கவனியுங்கள். **பரிசுத்த ஆவியானவர் நம்மை ஏவுகிறவர்.** இந்த அனுபவம் எல்லா தேவனுடைய பிள்ளைகளுக்கும் தேவை.

ஆவியானவர் எவற்றிற்கெல்லாம் நம்மை ஏவுவார்?

1. இரட்சிக்கப்படும்படி :

அப்பொழுது பேதுரு பரிசுத்த ஆவியினாலே நிறைந்து அவர்களை நோக்கி :

அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான் அப்.4:8,12.

2. ஞானஸ்நானம் பெற :

ஆவியானவர் : நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்று பிலிப்புடனே சொன்னார்.

இவ்விதமாய் அவர்கள் வழி நடந்து போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி : இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான்.

அதற்கு பிலிப்பு : நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான்; அப்பொழுது அவன் இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி ;

இரதத்தை நிறுத்தச் சொன்னான், அப்பொழுது **பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்;** பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்.

அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய் விட்டார் அப்.8:29, 36-39.

3. ஜெபம் பண்ணுவதற்கு :

அந்தபடியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக் கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார் ரோமர் 8:26.

4. ஊழியம் செய்ய :

அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது, பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினார்.

அப்பொழுது உபவாசித்து ஜெபம் பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள்.

அப்படியே அவர்கள் பரிசுத்த ஆவியினால் அனுப்பப்பட்டுச் செலுக்கியா பட்டணத்துக்கு வந்து, கப்பல் ஏறி, அங்கிருந்து சீப்புரு தீவுக்குப் போனார்கள்.

சாலமி பட்டணத்தில் வந்த போது அவர்கள் யூதருடைய ஜெப ஆலயங்களில் தேவ வசனத்தைப் பிரசங்கித்தார்கள் அப்.13:2-5.

5. கர்த்தருக்குக் காணிக்கை கொடுக்க :

கர்த்தர் மோசேயை நோக்கி : இஸ்ரவேல் புத்திரர் எனக்குக் காணிக்கையைக் கொண்டு வரும்படி அவர்களுக்குச் சொல்லு; மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் கொடுப்பவன் எவனோ அவனிடத்தில் எனக்குக் காணிக்கையை வாங்குவீர்களாக யாத்.25:1,2.

பின்பு எவர்களை அவர்கள் இருதயம் எழுப்பி, எவர்களை அவர்கள் ஆவி உற்சாகப்படுத்தினதோ, அவர்கள் எல்லோரும் ஆசரிப்புக் கூடாரத்தின் வேலைக்கும் அதின் சகல ஊழியத்துக்கும், பரிசுத்த வஸ்திரங்களுக்கும் ஏற்றவைகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டு வந்தார்கள் யாத்.35:21.

"அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" 2 கொரி.9:7.

நடந்த ஒரு சம்பவம்

'குருசேட்' என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் மாபெரும் சுவிசேஷ கூட்டங்களை தேவ மனிதர் ஒருவர் ஒரு பட்டணத்தில்நடத்திக் கொண்டிருந்தார். அந்த கூட்டங்களில் வாலிபன் ஒருவனும் பங்குபெற்றான். அவன் தன்னை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கும்படி ஆவியானவர் அவனை பலமாய் ஏவினார். அருகிலிருந்த அவனது நண்பர்களும் அவனை ஆண்டவருக்கு ஒப்புக் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். ஆனால் அவன் மிகுந்த கோபத்தோடு சுவிசேஷ கூட்டத்தை விட்டு அந்த நாள் இரவில் வெளி யேறினான்.

நடந்ததென்ன? அடுத்த நாள் அவன் வழக்கம்போல தன்னுடைய கார் பந்தயத்துக்குச் சென்றான். எதிர்பாராத விதமாக விபத்துக்குள்ளான அவனை ஆஸ்பத்திரியில் அனுமதித்தார்கள். சுவிசேஷ கூட்டங்களை நடத்தின தேவ மனிதர் ஜெபிப்பதற்காக அழைக்கப் பட்டார். அவர் வந்து அந்த வாலிபனுக்காக ஜெபம் பண்ண ஆரம்பித்தார், ஆனால் 'வானம் வெண்கலம் போல இருக்கிறது' என்று கூறினார்.

அருமையான கர்த்தருடைய பிள்ளையே, "தேவ தயவு நீ குணப்படும்படி உன்னை **ஏவுகிறதென்று** அறியாமல், அவருடைய தயவு பொறுமை, நீடிய சாந்தம் இவைகுகளின் ஐசுவரியத்தை அசட்டை பண்ணுகிறாயோ?" ரோமர் 2:4.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உதவி : 94897 40295
அலுவலகம் : 95432 21008
சமயம் : 10-01; 02-06

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

ஆசிரியர் குறிப்பு:

P. Venkateson என்ற பெயரில் வங்கிக்கு பணம் வந்திருந்தது. ஆனால் அது அவருடைய தகப்பனாருக்கான காணிக்கை என்று தொலை பேசி வழியாக தெரிவித்தப்படியால் அறிந்து கொண்டோம். இது போல இன்னும் சில பெயர்களில் பணம் வந்தும், அந்த பணம் யாருக்காக அனுப்பபட்டது என்று எங்களுக்கு தெரிய வில்லை. நீங்கள் போன் மூலமாக தகவல் தெரிவித்தால் மாத்திரமே உங்கள் பெயரில் வரவு வைக்க இயலும். இல்லாவிட்டால் Unknown என்ற பெயரில் ரசீது போடப்பட்டு அலுவலகத்தில் வைக்கப்படும்.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

தூய ஆவியானவர் உங்களில் இருப்பது, உங்கள் கிரியைகள் மூலம் வெளிப்பட வேண்டும். உயிருள்ள மரத்தில் இலைகள், பூக்கள், கனிகள் ஆகியவை வெளிப்படுவதுபோல, ஆவியால் நிரப்பப்பட்ட ஒருவரது வாழ்வில் அவரது எண்ணங்கள், விருப்பங்கள், சிந்தனைகள், பழக்கங்கள், வாழ்வு ஆகிய அனைத்துமே ஆவியின் கனியாக வெளிப்படும்.

இந்த நாட்களின் துக்கமான செய்தி என்னவெனில் பீடங்களிலிருந்து ஏராளமான மரித்த பிரசங்கங்கள் மரித்த மக்களுக்குப் பிரசங்கிக்கப்படுகின்றன.

தேனீக்கள் கட்டும் கூட்டின் அறைகள் ஒரே வடிவாய் அமைந்திருப்பது போல, ஆவியானவரின் கிரியையும் ஒரே மாதிரியான பலனைத் தரும்.

ஜெபத்திற்கு ஈடானது எதுவுமே இல்லை. ஜெபத்தின் விளைவாக தேவன் எதைச் செய்யக்கூடும் என்பதை விஞ்ஞானத்தில் மூழ்கிப்போன இத்தலைமுறை மக்கள் புரிந்து கொள்ள முடியவில்லை.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason